# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 12 டிசம்பர் 2019 ₹1.00


## பல்கலைக்கழகத்தின் இருபத்தொன்றாம் பட்டமளிப்பு விழா



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இருபத்தொன்றாம் பட்டமளிப்பு விழா, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள அண்ணா கலையரங்கில் 10.12.2019அன்று நடைபெற்றது. விழாவிற்கு மாண்புமிகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் தலைமை வகித்து, 356 பட்டதாரிகளுக்குப் பட்டங்களை வழங்கினார். மேலும், அஞ்சல் வழியில் பட்டங்களைப் பெறும் 210 பட்டதாரிகளுக்குப் பட்டங்கள் பெறுவதற்கான அனுமதியும் வழங்கினார்




தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் விழாவில் பங்கேற்று, ரூபாய் 8.6 இலட்ச மதிப்பிலான ஆறு விருதுகளையும் அறக்கட்டளைகளையும் நிறுவினார்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றிப் பல்கலைக்கழகத்தின் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கச் செயல்பாடுகள் மற்றும் கால்நடை மருத்துவச் சிகிச்சை சாதனைகள் குறித்த அறிக்கை அளித்தார். துணைவேந்தர் அவர்கள் தமது வரவேற்புரையில் மாண்புமிகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர் அவர்கள் சிறந்த கல்வியாளர், புகழ்பெற்ற சமூகச் செயற்பாட்டாளர், கல்வி நிலைய உருவாக்குநர், சிறந்த பொழிவாளர் (உரையாளர்), தேசியச் சிந்தனையாளர் மற்றும் பத்திரிகையாளர், ஐயா அவர்கள் இந்தப் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றிருப்பதால் பல்கலைக்கழகம் பெருமையடைகிறது என்றார். துணைவேந்தர் அவர்கள் சேலத்தில் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்படுவதற்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் நிர்வாக ஆளுகையின்கீழ் ஒரே இடத்தில் கால்நடை மருத்துவ அறிவியல், பால்வளம் மற்றும் மீன்வள அறிவியலின் அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்த ஒரு தொலைநோக்குத் திட்டமான "கால்நடை மருத்துவ அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி உயர் நிலையம்" சேலம் மாவட்டத்தில் துவக்கப்பட உள்ள சூழலில் கால்நடைப் பராமரிப்புத் துறை முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்றார்.

ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் 2019–20ஆம் கல்வியாண்டில் எம்.வி.எஸ்சி. பட்டப் படிப்பு துவங்கப்பட்டிருக்கிறது என்றும் பால்வளத் தொழில்நுட்பம், பால் வேதியியல் மற்றும் கோழியின உற்பத்தித் தொழில்நுட்பத்தில் முதுநிலைத் தொழில்நுட்பப் பட்டப்படிப்பும், பால் நுண்ணுயிரியியலில் முதுநிலைக் கால்நடை மருத்துவப் பட்டப்படிப்பும், கால்நடை மருத்துவ உயிர்வேதியியலில் முனைவர் பட்டப்படிப்பும் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். கால்நடை மருத்துவ அறிவியல் முதுநிலைப் பட்டப் படிப்பில் சேர்வதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய நுழைவுத் தேர்வில் நமது பல்கலைக்கழகம் அதிக எண்ணிக்கையில் இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகைக்கான இடங்களைப் பெற்றதற்காக முதல் பரிசு அளிக்கப்பட்டது என்றார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நிதியுதவி அளிக்கிற பெருமைமிகு தேசிய வேளாண் உயர் கல்வித் திட்டத்தின் பெரும் பயனாளிகளில் நமது பல்கலைக்கழகமும் ஒன்று என்றார். அறிக்கைக் காலத்தில் நமது பல்கலைக்கழகத்தின் 10 மாணவர்கள்

அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்தில் சிகிச்சையியல் உள்ளுறை பயிற்சியும், ஆறு மாணவர்கள் ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழகத்தில் சிகிச்சையியல் உள்ளுறை பயிற்சியும் மேற்கொண்டனர். மேலும், கிட்டத்தட்ட 550 இளநிலைப் பட்ட மாணவர்களுக்கு மென்திறன் பயிற்சி அளிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் இரண்டு பேராசிரியர்கள், வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்தனர். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் ஆறு பேராசிரியர்கள்



நமது பல்கலைக்கழகத்திற்கு வருகை புரிந்தனர். மொத்தம் 60 பேராசிரியர்கள் பயனடையும் வகையில் எட்டு ஆசிரியர் மேம்பாட்டுப் பயிற்சிகள் நடத்தப்பட்டன என்றும் தெரிவித்தார். மேம்பட்ட முட்டை ஆய்வு விளக்கு, கோழிக் கூண்டு மற்றும் ஆர் ஒய் இசட் கிரீம், எட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், தேசியக் கால்நடை மரபுவள ஆணையம் பர்கூர் எருமையைத் தனி இனமாகப் பதிவுசெய்து அதற்கான அணுகல் எண் வழங்கியமை, புதிய ஜப்பானியக்காடை முட்டை ரகம், தனுவாஸ் பியர்ள் காடை உருவாக்கம், தமிழ்நாடு புதுமை நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 13 ஏக்கரில் மூலிகைத் தோட்டம், நாட்டின நாய்களில் இரத்த வகை அறிதல், பாலிமர் எஸ்எம்ஏ உற்பத்தி நடைமுறை மேம்படுத்தம் ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்கள் மற்றும் சாதனைகளாகப் பட்டியலிட்ட துணைவேந்தர் அவர்கள் விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்கள் மேம்பாட்டிற்கு உதவக்கூடிய பல்கலைக்கழக ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குத் தமிழ்நாடு அரசு சுய நிதிகளை அளித்து வருகிறது. இதற்காக அரசுக்கு நமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறோம் என்றார். நடப்பாண்டில் தமிழ்நாடு அரசு ரூபாய் 3,210.23 இலட்ச மதிப்பிலான ஐந்து திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. மாணவர்களிடையே தொழில் முனைதல் செயல்பாட்டை ஊக்குவிக்கவும் கால்நடை மருத்துவ அறிவியல் புலத்தில் தொடக்க நிலைத் தொழில்களை உருவாக்கவும் பல்கலைக்கழகம் தொடங்கியுள்ள இலாபம் இல்லாத ஒரு 8 பிரிவு நிறுவனமான கால்நடை அறிவியல் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பானது வளைதள இணைப்பு சாதனங்கள், முப்பரிமாண அச்சிடல், எந்திரவியல், செயற்கை நுண்ணறிவு போன்ற முக்கியத் துறைகளில் 7 துவக்கநிலைத் தொழில்களை உருவாக்கி வருகிறது என்றும் குறிப்பிட்டார்.

விவசாயிகளின் நலனுக்காகப் பல்கலைக்கழகம் செயல்படுத்தி வருகிற பல்வேறு விரிவாக்கப் பணிகள் மற்றும் திட்டங்கள் பற்றிப் பேசிய துணைவேந்தர் அவர்கள், பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் விழுப்புரத்தில் ஒரு புதிய வேளாண் அறிவியல் நிலையம் துவங்க அனுமதியளித்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திற்கு நன்றி தெரிவித்தார். மேலும், கால்நடைப் பண்ணையாளர்கள் பயன் பெறும் வகையில் கால்நடை வளர்ப்புப் பயிற்சிகள், வெற்றிக் கதைகள், உரிய நேரத்தில் தொழில்நுட்ப நடவடிக்கை, புதிய தொழில்நுட்பங்கள் ஆகியவை பற்றி அறிந்துகொள்ளப் பல்கலைக்கழகச் சமூக ஊடகப் பிரிவு, வலையொளி (youtube) சமூக ஊடகத் தளத்தில் துவக்கப்பட்டுள்ளது என்றார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக மண்டலம் 10இல் சிறந்த வேளாண் அறிவியல் நிலையத்திற்கான “பண்டிட் தீன்தயாள் உபாத்யாய் ராஷ்டிர க்ருஷி விக்யான் புரோஷஹான் புரஸ்கார்” விருது, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு வழங்கப்பட்டது என்றும் இந்நிலையத்திற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் பருவநிலை மாற்ற வேளாண்மை குறித்த தேசியத் திட்டத்தின் (2018–19) கீழ் சிறந்த செயல்பாட்டிற்கான விருதும் அளிக்கப்பட்டது என்றும் பெருமையுடன் குறிப்பிட்டார். 14,513 பண்ணையாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் 706 வளாகப் பயிற்சிகளும், 14,686 பண்ணையாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் 1,062 புற வளாகப் பயிற்சிகளும், 8,749 பண்ணையாளர்கள் பயன்பெறும் வகையில் 130 விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்பட்டன. தமிழ்நாடு அரசின் விலையில்லாக் கறவை மாடு மற்றும் ஆடு வழங்கும் திட்டப் பயனாளிகளுக்கு 309 பயிற்சிகள் நடத்தப்பட்டு, 32,326 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர் என்றும் தெரிவித்தார். துணைவேந்தர் அவர்கள் பல்கலைக்கழகம் அளித்துவருகிற சிகிச்சையியல் சேவைகளைப் பட்டியலிட்டு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் புதிதாக அமைக்கப்பட்ட கணினிவழி உடலுறுப்பு ஊடுகதிர்ப்படப் பிரிவுகளை (சிடி ஸ்கேன் பிரிவு) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 19.02.2019அன்று துவக்கிவைத்ததைச் சுட்டிக்காட்டினார். மேலும், பல்கலைக்கழகத்தின் நான்கு கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும் ரூபாய் 60.00 இலட்சத்தில் பெரிய கால்நடைகளுக்கான மயக்க மருந்து இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது என்றார். ஒரு புதிய முயற்சியாக, சிகிச்சையியல் இயக்ககம்மூலம் நான்கு கால்நடை மருத்துவக் கல்லூரிகளுக்கும் சிகிச்சையியல் முக்கியத்துவம் வாய்ந்த தலைப்பு குறித்து இணைய வழியிலான விரிவுரை நிகழ்ச்சி தொடர்ச்சியாக நடத்தப்படுகிறது என்று குறிப்பிட்டார். தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் கவனம் கொள்ளத்தக்க எதிர்காலத் திட்டங்களைப் பட்டியலிட்டுத் துணைவேந்தர் அவர்கள் தமது வரவேற்புரையை நிறைவுசெய்தார்.

குஜராத், ஆனந்த், தேசியப் பால்வள வாரியத் தலைவர் திரு. திலிப் ரத் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் உயர் வெப்பநிலை மற்றும் தீவிரப் பருவநிலைச்



சூழல்கள் காரணமாகக் கால்நடை இனப்பெருக்கத் திறன், பால் உற்பத்தி, இறைச்சி உற்பத்தி ஆகியவை குறைந்து வருவதாலும் கால்நடை நலச் சிக்கல்களாலும் கால்நடை வளர்ப்பானது ஆபத்திற்குள்ளாகி இருப்பதால், பருவநிலை மாற்றத்திற்கேற்ற கால்நடை இனங்களைத் தன்னகத்தே கொண்ட இனப்பெருக்கத் திட்டங்களை உள்ளடக்கிய தகுந்த கால்நடை வளர்ப்பு முறைகளை உருவாக்குதலுக்கு இது உரிய நேரம் என்றார். மேலும், மேய்ச்சல் நிலங்கள் குறைப்பு, பசுந்தீவனம் மற்றும் நார்த்தீவன உற்பத்திக்கான நிலப்பரப்பு சுருங்கிவருதல், பருவநிலை மாற்றத்தின் காரணமான தீவிர வானிலை மாற்றங்களுடன் கால்நடைகளுக்குக் கிடைக்கும் குடிநீரின் அளவு குறைவு ஆகிய காரணங்களால் பால், முட்டை போன்ற கால்நடை உற்பத்திப் பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பு கால்நடை உற்பத்தித்திறன் அதிகரிப்பால் பெறப்பட வேண்டுமே ஒழிய எண்ணிக்கையால் அல்ல என்று தெரிவித்தார். நாட்டினக் கால்நடை மற்றும் கோழியினங்கள் மிகவும் இடர்தாங்கு சக்தியும்

வலுவுள்ளதாகவும் இருப்பதால் பருவநிலை மாற்றம் இவற்றைக் குறைந்த அளவே பாதிக்கும். வெப்பத்தைத் தாங்கும் இவற்றின் தனித்த பண்பியல்புகள், உண்ணி மற்றும் பூச்சி எதிர்ப்பாற்றல், நோய் எதிர்ப்பாற்றல், தீவிரப் பருவநிலை மாற்றச்சூழல்களில் விருத்தியடையும் திறன் ஆகியவற்றின் காரணமாக இத்தகைய நாட்டினங்கள் பாதுகாக்கப்பட்டு, வளர்ச்சியடையச் செய்யப்பட வேண்டும் என்றார். இந்த நோக்கத்தில் பர்கூரில் "பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையமும்", காங்கேயம், புலிக்குளம் மற்றும் ஆலம்பாடி மாட்டினங்கள் உள்ள பகுதிகளில் அந்த இனங்களைப் பாதுகாத்து உருவாக்க, அந்த இனங்களுக்குரிய ஆராய்ச்சி நிலையங்களும் நிறுவச்செய்த பல்கலைக்கழகத்தின் நடவடிக்கை மிகவும் பாராட்டத் தக்கது என்று தெரிவித்து, தமது உரையை நிறைவு செய்தார்.

பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 103 பதக்கங்களும் விருதுகளும் கல்வியில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. பி.வி.எஸ்சி. மற்றும் ஏ.எச். பட்டப் படிப்பில் கிராமப் பகுதியைச் சார்ந்த மருத்துவர் ஜி. ஆனந்தி, 18 பதக்கங்களையும்,



மருத்துவர் அஞ்சனா மோகன்ராஜ் 12 பதக்கங்களையும், மருத்துவர் டி.பி. கௌதம் 7 பதக்கங்களையும்; பி.டெக். (உணவுத் தொழில்நுட்பம்) பட்டப் படிப்பில் பொறியாளர் பி. சூர்யா 3 பதக்கங்களையும், பி.டெக். (கோழியின உற்பத்தித் தொழில்நுட்பம்) பட்டப் படிப்பில் பொறியாளர் ஏ. முகமது ரஜிக் 2 பதக்கங்களையும் பெற்றனர். பல்கலைக்கழகத்தின் மேலாண்மைக் குழு, கல்விக் குழு மற்றும் பட்டமளிப்பு விழாக் குழுவைச் சார்ந்த உறுப்பினர்கள், முன்னாள் துணைவேந்தர்கள், பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள், பட்டம் பெற்ற மாணவர்களின் பெற்றோர்கள், பல்கலைக்கழகப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றனர்.

## ஆராய்ச்சி நிலையங்களின் நிர்வாகக் கட்டடங்கள் திறப்பு விழா

**புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம்:** சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மாங்குளம் கிராமத்தில் "புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலைய" நிர்வாகக் கட்டடத் திறப்பு விழா 21.11.2019



அன்று நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்தார். மாண்புமிகு தமிழகக் கதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர் திரு. ஜி. பாஸ்கரன் அவர்கள் "புலிகுளம் மாடுகள்" எனும் நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திரு. ஜெ. ஜெயகாந்தன் இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ் அவர்கள் வரவேற்புரை ஆற்றி, ஆராய்ச்சி நிலையத் திட்டம் குறித்து விளக்கமளித்தார். இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஈரோடு கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டனர். நிறைவாக, புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் டி. சத்தியமூர்த்தி அவர்கள் நன்றி தெரிவித்தார்.

**காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம்:** ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பகுத்தம்பாளையம், உப்புப்பள்ளம் கிராமத்தில்



"காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலைய" நிர்வாகக் கட்டடத் திறப்பு விழா 25.11.2019 அன்று நடைபெற்றது. இந்த விழாவில் மாண்புமிகு தமிழகப் பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்தார். மாண்புமிகு தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஈரோடு மாவட்ட ஆட்சியர் திரு. சி. கதிரவன் இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் முன்னிலை வகித்தார். பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ் அவர்கள் வரவேற்புரை ஆற்றி, ஆராய்ச்சி நிலையத் திட்டம் குறித்து விளக்கமளித்தார். இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஈரோடு கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர், பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் வேளாண் பெருமக்கள் கலந்து கொண்டனர். நிறைவாக, காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். மனோகரன் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

## ஆலம்பாடி மாட்டின இனவிருத்தி ஆராய்ச்சி மையத் துவக்க விழா மற்றும் பூமி பூஜை

தர்மபுரி மாவட்டம், காரியமங்கலம் வட்டம், அனுமந்தபுரம் கிராமத்தில் உள்ள பல்லேனஅள்ளியில் "ஆலம்பாடி மாட்டின இனவிருத்தி ஆராய்ச்சி மையத் துவக்க விழா மற்றும் புதிய கட்டடத்திற்கான பூமி பூஜை" 28.11.2019 அன்று நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், மாண்புமிகு தமிழகக் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினர். தர்மபுரி மாவட்ட ஆட்சியர் திருமதி சு. மலர்விழி இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் முன்னிலை வகித்தார். பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ்



அவர்கள் வரவேற்புரை ஆற்றி, ஆராய்ச்சி நிலையத் திட்டம் குறித்து விளக்கமளித்தார். நிறைவாக, ஆலம்பாடி மாட்டின இனவிருத்தி ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ. தென்னரசு அவர்கள் நன்றி தெரிவித்தார்.

### பன்னாட்டுக் கருத்தரங்கு




நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மூலம் "கால்நடை மற்றும் கோழிகளின் உற்பத்தி திறனை மேம்படுத்தப் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தும் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால உத்திகள்" எனும் பன்னாட்டுக் கருத்தரங்கு 20.11.2019 முதல் 22.11.2019 வரை நடைபெற்றது. கருத்தரங்கைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 20.11.2019அன்று துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். அவர் தம் உரையில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் புதிய நோய்களைக் கட்டுப்படுத்த ஒன்றிணைந்த முழுமையான அணுகுமுறையைக் கையாள வேண்டும் என்றார். கேரளக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எம்.ஆர். சசிந்திரநாத் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர்ராஜ், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பா. மோகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கருத்தரங்க அமைப்புச் செயலாளர் மற்றும் கல்லூரியின் கால்நடை நோய்த்தடுப்பு மருத்துவத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே.எம். பழனிவேல் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்க இணை அமைப்புச் செயலாளர் மற்றும் கல்விச் சிறப்புப் பிரிவின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஏ. ராஜா அவர்கள் நன்றி கூறினார். கருத்தரங்கில் அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணப் பல்கலைக்கழகம், வடக்கு டகோட்டா மாகாணப் பல்கலைக்கழகம், இங்கிலாந்தின் லிவர்பூல் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த வல்லுநர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். கால்நடை மற்றும் கோழிகளின் நலன் தொடர்பான 23 முதன்மை ஆய்வுக் கட்டுரைகளும், 187 ஆராய்ச்சி கட்டுரைகளும் 127 ஆராய்ச்சியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டன. 22.11.2019அன்று நடைபெற்ற கருத்தரங்கின் நிறைவு விழாவில் பென்சில்வெனியா பல்கலைக்கழகத்தின் நோய் கண்டறியும் ஆய்வகப் பேராசிரியர் முனைவர் புஃஷ் ஜெயராவ் அவர்கள் தலைமை வகித்துச் சான்றிதழ் மற்றும் விருதுகள் வழங்கி, நிறைவுரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தின் மேலாண்மைக் குழு உறுப்பினர் திரு.ஆர்.எச்.கோபால் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

### ஆய்வுக்கூடம் மற்றும் வானிலைக் காட்சிப்பலகைத் திறப்பு விழா

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட "எண்ணியல் முறையிலான வானிலைக் காட்சிப் பலகை", கல்லூரியின் கோழியின அறிவியல் துறையில் புதிதாகக் கட்டப்பட்ட "முதுநிலைப் பட்டப்படிப்பு ஆய்வுக் கூடம்" ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 20.11.2019அன்று திறந்து வைத்தார்.

### பாலேடு பிரிப்பானுடன் இணைந்த வெண்ணெய் கடையும் இருசெயல் இயந்திரம்



பால்பண்ணைத் தொழில் முனைவோர்களுக்காகப் புதிதாக உருவாக்கப்பட்ட "பாலேடு பிரிப்பானுடன் இணைந்த வெண்ணெய் கடையும் இரு செயல் இயந்திரத்தைப்" பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 20.11.2019அன்று துவக்கிவைத்தார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் பா. மோகன் ஆகியோர் உடனிருந்தனர். இந்த இயந்திரத்தை நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர், கல்லூரியின் பால்வளத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜி. குமரேசன் மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர் ந. கார்த்திகேயன் ஆகியோரின் வழிகாட்டுதலின் பேரில் இளநிலைப் பட்ட மூன்றாம் ஆண்டு மாணவர்கள் செல்வி எஸ். பிரீத்தி, செல்வி எஸ். ஐஸ்வர்யா, செல்வன் ஆர். பிரேம்சந்த், செல்வன் எம்.இ. சரண் ஆகியோர் உருவாக்கினர். இதற்கான நிதியுதவியைப் பல்கலைக்கழகத்தின் தொடக்கநிலைத் தொழில் உருவாக்க அமைப்பு வழங்கியது.

### கோடைக்காலப் பயிற்சி

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியுடன் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 13.11.2019 முதல் 03.12.2019 வரை நடத்தப்பட்ட "செயல்பாட்டுப் பால்சார்ந்த உணவுப் பொருட்கள் மற்றும் தர உறுதியில் அண்மைக்கால நடைமுறைகள்" எனும் கோடைக்காலப் பயிற்சியில் 17 பேர் பங்கேற்றனர். 03.12.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பங்கேற்று, பயிற்சி நிறைவு செய்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுரை ஆற்றினார். இந்தியப் பால்வளச் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் முனைவர் சி. நரேஷ்குமார், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் ஜெ. ஜான் கிருபாகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் (பால்வள அறிவியல்) துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப. தனலட்சுமி அவர்கள்

வரவேற்புரை ஆற்றினார். பயிற்சி இயக்குநர் மற்றும் பேராசிரியர் முனைவர் தி.அர. புகழேந்தி அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார். பேராசிரியர் முனைவர் ப. சுரேஷ் சுப்பிரமணியன் அவர்கள் நன்றி கூறினார்.

### செயற்குழு மற்றும் ஆய்வுக் குழுக் கூட்டம்



கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத் தளத்தின் 10ஆவது செயற்குழு மற்றும் ஆய்வுக் குழுக் கூட்டம் 11.11.2019அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். மத்திய அரசின் உயிர்த் தொழில்நுட்பத் துறையின் ஆலோசகர் முனைவர் ஏ.கே. ராவத் அவர்கள் கூட்டத்திற்கு இணைத் தலைமை வகித்தார். செயற்குழு மற்றும் ஆய்வுக் குழு உறுப்பினர்களான இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத் துணைவேந்தர் மற்றும் இயக்குநர் முனைவர் ஆர்.கே. சிங், தேசியப் பால்வள மேம்பாட்டு வாரிய ஆலோசகர் மற்றும் ஐதராபாத், இந்திய இம்னோலாஜிகல்ஸ் நிறுவனத்தின் முன்னாள் மேலாண்மை இயக்குநர் முனைவர் வி.ஏ. சீனிவாசன், புதுதில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் (கால்நடை நலம்) முனைவர் அசோக்குமார், மைசூர், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் இராணுவ உணவு ஆராய்ச்சி ஆய்வகத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் எச்.வி. பத்ரா, குஜராத் உயிர்த்தொழில்நுட்ப ஆராய்ச்சி மைய இயக்குநர் பேராசிரியர் சி.ஜி. ஜோஷ் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர். கூட்டத்தின்போது கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத்தில் “மரபணுக் கோர்வையை வரிசைப்படுத்தப் புதிய வசதியை” பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் துவக்கிவைத்தார். மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட கானிபுரோ ஜெல் மற்றும் கானிசிவ் தொழில்நுட்பங்களையும் வெளியிட்டார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ், ஆராய்ச்சி இயக்குநர் (பொ.) முனைவர் செசிலியா ஜோசப், கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளத்தின் திட்ட இயக்குநர் (பொ.) முனைவர் எம். ராமன் ஆகியோர் உடனிருந்தனர்.

### தொலைநிலைக் கல்விப் படிப்புகள் பற்றிய அறிமுக நிகழ்ச்சி

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககமும் இந்திரா காந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகமும் இணைந்து, “தொலைநிலைக் கல்வி மூலமான பால்வளத் தொழில்நுட்பத்தில் பட்டயப் படிப்பு, இறைச்சித் தொழில்நுட்பத்தில் பட்டயப் படிப்பு, கோழி வளர்ப்பில் சான்றிதழ்ப் படிப்பு ஆகியவற்றின் கல்வி ஆலோசகர்களுக்கு அறிமுக நிகழ்ச்சியை”, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 22.11.2019அன்று நடத்தின. நிகழ்ச்சியில் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இந்திரா காந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் சென்னை மண்டல இயக்குநர் முனைவர் கே. பன்னீர்செல்வம் அவர்கள் நிகழ்ச்சியின் நோக்கம் மற்றும் இந்திரா காந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் படிப்புத் திட்டங்கள் குறித்து விளக்கினார். இந்திரா காந்தி தேசியத் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் சென்னை மண்டல உதவி இயக்குநர்கள் முனைவர் பி.எம். பீமாராவ் மற்றும் முனைவர் எஸ்கே. ஜரினா ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். மொத்தம் 13 கல்வி ஆலோசகர்கள் மற்றும் படிப்புகளில் பங்கேற்கப் பதிவுசெய்தவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பங்கேற்பு



இந்தியக் கால்நடை மருத்துவச் சங்கம்மூலம் கேரளாவின் வயநாடு, பூக்கோடு, கேரளக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் 09.11.2019அன்று நடத்தப்பட்ட 11ஆவது கேரளக் கால்நடை மருத்துவ அறிவியல் மாநாட்டின் துவக்க விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றார்.

### அறிமுக நிகழ்ச்சி மற்றும் பயிலரங்கு

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறைமூலம் “முக்கியத் தகவல் தருபவர்களுடன் நேர்காணல்” குறித்த அறிமுக நிகழ்ச்சி மற்றும் பயிலரங்கு, 20.11.2019 முதல் 27.11.2019 வரை சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. இப் பயிலரங்கு இங்கிலாந்து ஆராய்ச்சி மற்றும் புதுமை – உலகளாவிய சவால்களுக்கான ஆராய்ச்சி நிதியுதவியிலான ஒரே சுகாதாரக் கோழி மையப் பல்நிலையத் திட்டத்தின்கீழ் நடத்தப்பட்டது. இலண்டன் சுகாதார மற்றும் வெப்ப மண்டல மருத்துவப் பள்ளியின் பேராசிரியர் (சமூக அறிவியல்) டோனி பர்னெட் அவர்கள் அறிமுக நிகழ்ச்சி மற்றும் பயிலரங்கின் வல்லுநராகச் செயல்பட்டார். குஜராத், ஆனந்த் வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் நமது பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### ஆசிரியர் பயிற்சி முகாம்

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின உயர்கல்வி மையத்தில் குஜராத், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களின் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்களின் இருபது பேராசிரியர்களுக்காக “வணிகரீதியாக வளர்க்கப்படும் கோழிகளில் ஊட்டச்சத்து மற்றும் மதிப்புக்கூட்டல் பற்றிய செய்முறை அறிவுப்பகிர்வு” எனும் பயிற்சி 06.11.2019 முதல் 26.11.2019 வரை நடைபெற்றது.

### பயிலரங்கு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உடற்செயலியல் துறை சார்பாக “கறவை மாடுகளில் சினைப்பருவத்தைத் தூண்ட புரஸ்ஜெஸ்ட்ரான் சேர்க்கப்பட்ட யோனிக்குழாய்ப் பஞ்சுகளின் பயன்பாடு” பற்றிய பயிலரங்கு 29.11.2019அன்று நடைபெற்றது. அரசு கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் ஆவின் மருத்துவர்கள் எனச் சுமார் 28 பேர் கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பயிலரங்கின் நிறைவு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துச் சான்றிதழ் வழங்கினார். நாமக்கல், கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மருத்துவர் பி.வி. பொன்னுவேல், நாமக்கல், ஆவின் பொது மேலாளர் மருத்துவர் பி. சுந்தரவடிவேலு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

### பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைமூலம் "கால்நடை மருத்துவத்தில் கதம்ஒலிப் பயன்பாடு" பற்றிய பயிற்சி, ஈரோடு மாவட்டத்தைச் சார்ந்த 11 அரசு கால்நடை மருத்துவர்களுக்கு 25.11.2019 முதல் 28.11.2019 வரை நடத்தப்பட்டது.

### உழவர் பயிற்சி

- திருப்பூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதற்கான திறன்மேம்பாடு என்பதின்கீழ் "கால்நடை



வளர்ப்பில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களின் மேலாண்மை" எனும் பயிற்சி நபார்டு நிதியுதவியுடன் 06.11.2019 முதல் 08.11.2019 வரை நடைபெற்றது. பயிற்சியினைத் திருப்பூர் மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் மருத்துவர் ஆர். பெருமாள்சாமி அவர்கள் துவக்கிவைத்தார். திருப்பூர் கோட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் மருத்துவர் அர. பிரகாசம், திருப்பூர் மாவட்டக் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவின் உதவி இயக்குநர் மருத்துவர் த. இளங்கோ, நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு. ராஜு, முதன்மை வங்கிப் பொது மேலாளர் திரு. சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். மொத்தம் 30 பேர் பயிற்சி பெற்றனர். மேலும், இம் மையம்மூலம் நபார்டு நிதியுதவியுடன் "கறவை மாட்டில் இனப்பெருக்கக் கோளாறுகள்: காரணங்கள் மற்றும் அணுகுமுறைகள்" எனும் பயிற்சி 20.11.2019 முதல் 22.11.2019 வரை நடைபெற்றது. பயிற்சியினைத் திருப்பூர் மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் மருத்துவர் ரங்கநாதன் துவக்கி வைத்தார். நபார்டு வங்கியின் உதவிப் பொது மேலாளர் திரு. ராஜு வாழ்த்துரை வழங்கினார். 30 பண்ணையாளர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.
- தேசியக் கால்நடை இனவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதியுதவியுடன் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறைமூலம் "மாடுகளில் செயற்கைமுறைக் கருவூட்டல்" எனும் ஒரு மாத காலப் பயிற்சி, 27 கிராமப்புற இளைஞர்களுக்காக 04.11.2019. முதல் 03.12.2019 வரை நடத்தப்பட்டது.

### வெறிநோய்த் தடுப்பூசி முகாம்

திருப்பூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், திருப்பூர் மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறையுடன் இணைந்து பல்லடம், கால்நடை மருத்துவமனையில் "இலவச வெறிநோய்த் தடுப்பூசி" முகாமினை 15.11.2019அன்று நடத்தியது. முகாமில் 90 செல்லப்பிராணிகளுக்கு வெறிநோய்த் தடுப்பூசி போடப்பட்டது.

### கால்நடை நல முகாம்

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியமும் திருநெல்வேலி, கால்நடைப் பராமரிப்புத் துறையும் இணைந்து திருநெல்வேலி மாவட்டத்தின் திருமலாபுரம் கிராமத்தில் 29.11.2019அன்று "கால்நடை நல முகாமை" நடத்தின. நிகழ்ச்சிக்குத் திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத் தலைவர் திரு. சுதா கே. பரமசிவன் அவர்கள் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருநெல்வேலி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் பி.டி.ஆர். தியோபிளஸ் ரோஜர், திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியப் பொது மேலாளர் திரு. ஜி. ஸ்ரீரங்கநாததுரை, அம்பாசமுத்திரப் பிரிவுக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் மருத்துவர் ஜெ. ஆப்ரகாம் ஜாப்ரே ஞானராஜ் ஆகியோர் முகாமில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். முகாமில் 120 கால்நடைகளுக்குப் பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு, குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது.

### தேசியப் பால்வள நாள்–2019

- கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியில் தேசியப் பால்வள நாள் 26.11.2019அன்று கடைபிடிக்கப்பட்டது. அலமாதியைச் சுற்றியுள்ள மொத்தம்



ஐந்து அரசு பள்ளிகளின் மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் வே. அப்பாராவ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தமிழ்நாடு கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றிய (ஆவின்) நிர்வாக இயக்குநர் திரு. சி. காமராஜ், இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். திண்டுக்கல்லின் ராஜ் மில்க் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். ராஜசேகர் அவர்கள் "பால்வளத் துறையில் தொழில்முனைவோரின் வளர்ச்சி" எனும் தலைப்பில் சிறப்பு விரிவுரை ஆற்றினார். இந்தியப் பால்வளச் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் முனைவர் சி. நரேஷ்குமார், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருள்கள் தொழில்நுட்பத் (பால்வள அறிவியல்) துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ப. தனலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் உணவு பதப்படுத்தும் தொழில்நுட்பத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் த. ராமசாமி அவர்கள் நன்றி கூறினார்.
- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உற்பத்திப் பொருள்கள் தொழில்நுட்பத் (பால்வள அறிவியல்) துறையில் தேசியப் பால்வள நாள், 26.11.2019 அன்று கடைப்பிடிக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துக் கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.
- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தேசியப் பால்வள நாள், 26.11.2019அன்று கடைப்பிடிக்கப்பட்டு, மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

### வனவிலங்கு வார விழா–2019

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வனவிலங்குப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் வகையில் “வனவிலங்கு வார விழா” 20.11.2019அன்று கொண்டாடப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட வன அலுவலர் மருத்துவர் என். செந்தில்குமார் இ.வ.ப. அவர்கள் விழாவில் பங்கேற்று, “வனவிலங்குகளைக் கையாளும் முறைகள்” பற்றிய நூல் வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார்.

### வேளாண் அறிவு மேலாண்மைக் கருவிகள் பற்றிய உணர்திறன் பயிலரங்கு

பல்கலைக்கழக நூலகம் மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர் கல்வித் திட்ட நிதியுதவியுடன் “வேளாண் அறிவு மேலாண்மைக் கருவிகள்” பற்றிய உணர்திறன் பயிலரங்கு, பெங்களூரு வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகத்தில் 09.11.2019அன்று நடத்தப்பட்டது. பெங்களூரு வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் எஸ். ராஜேந்திர பிரசாத் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்தார். பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் முதுநிலைப் பட்ட ஆராய்ச்சி முதல்வர் முனைவர் ஏ.ஜி. சங்கர், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் இணைப்பு அலுவலர் பேராசிரியர் கே.பி. சின்னசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தெலுங்கானா, வாராங்கல்–தேசியத் தொழில்நுட்ப நிலையத்தின் தலைமை நூலகர் முனைவர் கே. வீரயாஞ்சநேயலு, திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் பல்கலைக்கழக நூலகர்(பொ.) முனைவர் ஜி. ரத்தினசபாபதி ஆகியோர் பயிலரங்கின் வல்லுநர்களாகச் செயல்பட்டனர். பெங்களூரு வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழக நூலகர் முனைவர் வி. சீனிவாசா அவர்கள் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார். பயிலரங்கில் 310 ஆராய்ச்சி மாணவர்கள் பங்கேற்றனர்.

### விருதுகள்

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். தர்மசீலன் அவர்களுக்கு கால்நடை அறுவைச் சிகிச்சை மேம்பாட்டிற்கு ஆற்றிய பங்களிப்பிற்காக, ஹரியாணா, இசார், லாலா லஜபதிராய் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் 14.11.2019அன்று நடைபெற்ற 43ஆவது ஆண்டு மாநாடு மற்றும் இந்தியக் கால்நடை அறுவைச் சிகிச்சை சங்கத்தின் தேசியக் கலந்தாய்வரங்கில் “இந்தியக் கால்நடை அறுவைச் சிகிச்சை சங்க ஆராய்ச்சியாளர்” விருது அளிக்கப்பட்டது.
- முனைவர் அ. மணிவண்ணன், முனைவர் பெரு. மதியழகன், முனைவர் நர்மதா, முனைவர் பா. மோகன் ஆகியோரால் எழுதப்பட்டு, ஆசியன் அக்ரி ஹிஸ்டரி (22–2) சஞ்சிகையில் 2018ஆம் ஆண்டில் வெளிவந்த ”தமிழ்நாட்டில் செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பில் காணப்படும் உள்நாட்டுப் பாரம்பரிய அறிவுகள்” எனும் கட்டுரைக்குச் சிறந்த ஆய்வுக் கட்டுரைக்கான பால்வே–2018 விருது, உத்ரகண்ட், பந்த் நகர், ஆசியன் அக்ரி ஹிஸ்டரி அறக்கட்டளைக் குழுவால் வழங்கப்பட்டது.

### மாணவர்கள் சாதனை

- புதுச்சேரியில் உள்ள ராஜீவ் காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் “2030இல் கால்நடை மருத்துவம்” எனும் பொருளில் தேசிய அளவில் கல்லூரிகளுக்கு இடையே ஓவியம் குறித்த இணையவழி இலக்கியப் போட்டி 14.11.2019அன்று நடத்தப்பட்டது. இதில் பங்கேற்ற ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலைப் பட்ட நான்காம் ஆண்டு மாணவன் செல்வன் எம். மகேஸ்வரன் முதல் பரிசு பெற்றார்.
- 2018இல் ரஷ்யாவின் பிலோரஸ் நகரில் நடைபெற்ற 4ஆவது உலக வலைப்பந்துப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி




நிலையத்தின் இளநிலைப் பட்ட மூன்றாம் ஆண்டு மாணவன் செல்வன் எஸ். அபிஷேக்கிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ரூபாய் 10,00,000/–க்கான காசோலை வழங்கினார்.
- மும்பை, பாபா அணுசக்தி நிலையம் இந்திய அளவில் 21.10.2019முதல் 31.10.2019வரை நடத்திய கல்லூரி மாணவர்களுக்கான 31ஆவது கட்டுரைப் போட்டியில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலைப் பட்ட இரண்டாம் ஆண்டு மாணவன் செல்வன் அங்கித்குமார் முதல் பரிசு வென்று, பாராட்டுச் சான்றிதழும் ரூபாய் 25000/–க்கான பணமுடிப்பும் பெற்றார்.

### ராகிங் தடுப்புக் குழுக் கூட்டம்



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 04.11.2019அன்று ராகிங் தடுப்புக் குழுவின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் தலைமை வகித்து, கல்லூரி மற்றும் விடுதி வளாகத்தில் இவ்வாண்டிற்கான ராகிங் தடுப்புப் பணிகளை எடுத்துரைத்தார்.

### ஆளுமைத்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சி

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஆளுமைத் திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சி 28.11.2019அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் தலைமை வகித்தார். பட்டுக்கோட்டை, ஆளுமைத்திறன் மேம்படுத்தல் பேச்சாளர் திருமதி என். ஜெயசித்ரா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மொத்தம் 240 மாணவர்கள் பங்கேற்றனர்.

### யோகா பற்றிய பயிலரங்கு

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கல்விச் சிறப்புப் பிரிவுமூலம் “யோகாமூலம் சிறந்த உடல்நலம்” குறித்த பயிலரங்கு 21.11.2019 மற்றும் 22.11.2019ஆம் தேதிகளில் நடைபெற்றது. பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் பயிலரங்கைத் துவக்கி வகித்தார். புதுதில்லி, தேசிய இயற்கை மருத்துவ அமைப்பின் திரு. டி. மனோகரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/05254
Date of publication : 25th and 26th of every month

பெறுநர்

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

### தேசிய மாணவர் படை மாணவர்க்கு விருது

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இளநிலைப் பட்ட இரண்டாம் ஆண்டு மாணவன் செல்வன் ஜி மனோஜ்குமார், தஞ்சையில் 29.11.2019அன்று நடைபெற்ற தேசிய மாணவர் படை நாள் நிகழ்ச்சியில் சிறந்த தேசிய மாணவர் படை மாணவர் விருதினைப் பெற்றார்.

### நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் “தலைமைப்பண்பு வளர்த்தல் மற்றும் ஆளுமைத்திறன் மேம்பாடு” எனும் நிகழ்ச்சி 08.12.2019அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். பிஎஸ்என் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் நல்லசிவன் அவர்கள் நிகழ்ச்சி அமர்வுகளை ஒருங்கிணைத்தார். மேலும், விடுதலைப் போராட்ட வீரர் திரு. வ.உ. சிதம்பரம் பிள்ளையின் 83ஆவது நினைவு நாளை முன்னிட்டு, “மரக்கன்று நடுதல்” நிகழ்ச்சி 19.11.2019அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் கல்லூரி விடுதியில் உதவியாளராகப் பணியாற்றி வரும் வ.உ. சிதம்பரம் பிள்ளையின் பெயர்த்தி திருமதி ஆனந்தவல்லி அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.
- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் “டெங்கு விழிப்புணர்வு” முகாம் 09.11.2019அன்று நடத்தப்பட்டது. முகாமில் ஒரத்தநாடு, மருத்துவ மேற்பார்வையாளர் திரு. பரமசிவன், ஒரத்தநாடு, சுகாதார ஆய்வாளர் திரு. இளங்கோ, மருத்துவ அலுவலர்கள் மற்றும் அவர்களின் குழுவினர் முகாமில் பங்கேற்றனர். மேலும், மொத்தம் 150 நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. குலசேகர் அவர்கள் 30.11.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 29.11.1959இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறையின் கண்காணிப்பாளர் திருமதி எஸ். ஜெகதாம்பாள் அவர்கள் 30.11.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 14.11.1961இல் பிறந்த இவர், 27 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையத்தின் உதவியாளர் திரு. எஸ். தங்கராஜு அவர்கள் 31.10.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 22.10.1961இல் பிறந்த இவர், 13 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலக உதவியாளர் திருமதி பிரமிளா சந்திர குமாரி அவர்கள் 30.11.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 14.11.1961இல் பிறந்த இவர், 06 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் திறனில்லாப் பணியாளர் திரு. இ. எலந்தன் அவர்கள் 30.11.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.12.1959இல் பிறந்த இவர், 29 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா